www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

**வகுப்பு : 8** தேர்வு எண்

# அரையாண்டுப் பொதுத் தேர்வு - 2024 - 25

நேரம் : 2.30 மணி] **சமூக அறிவியல்** [மொத்த மதிப்பெண்கள் : 100

**I. சரியான விடையினை தேர்ந்தெடுத்து எழுதுக.** **14x1=14**

1. பின்வரும் ஐரோப்பிய நாடுகளுள் இந்தியாவுக்கு கடல் வழியைக் கண்டுபிடிப்பதில் முதன்மையாக இருந்த நாடு எது?
   அ) நெதர்லாந்து ஆ) பிரான்ஸ் இ) போர்ச்சுகல் ஈ) பிரிட்டன்
2. இன்டிகோ கிளர்ச்சியரால் தலைமையேற்று நடத்தப்பட்டது?
   அ) மகாத்மா காந்தி ஆ) திகம்பர் பிஸ்வாஸ் இ) கேசப் சந்திரராய் ஈ) சர்தார் வல்லபாய் பட்டேல்
3. மாறுப்பட்ட ஒன்றைக் கண்டுபிடி
   அ) கட்டபொம்மன் ஆ) செவத்தையா இ) ஊமைத்துறை ஈ) திப்பு சுல்தான்
4. ------ தொழில் இந்தியாவின் பழமையான தொழிலாகும்.
   அ) நெசவு ஆ) மின்சக்தி இ) எஃகு ஈ) உரங்கள்
5. ஆங்கிலேயரால் உருவாக்கப்பட்ட நகரம் / நகரங்கள்
   அ) சூரத் ஆ) பம்பாய் இ) கோவா ஈ) மேற்கண்ட அனைத்தும்
6. ------ என்ற கருவி ஈரப்பதத்தை அளக்கப்பயன்படுகிறது.
   அ) காற்றுமானி ஆ) அழுத்தமானி இ) ஈரநிலைமானி ஈ) வெப்பமானி
7. கீழே கொடுக்கப்பட்டுள்ள கூற்றையும் காரணத்தையும் ஆராய்க.
   கூற்று : நகரமயமாதல் முக்கியமாக கிராமப்புற மக்கள். நகர்புறத்திற்கு இடம் பெயர்வதால் ஏற்படுவதாகும்.
   காரணம் : கிராமத்தில் இருந்து நகரத்திற்கு இடம்பெயர்தல் முதன்மையான ஒன்றல்ல
   அ) கூற்று சரி ஆனால் காரணம் தவறு ஆ) கூற்று மற்றும் காரணம் தவறு
   இ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி ஈ) கூற்று தவறு காரணம் சரி
8. இந்திய பெருங்கடலில் சுனாமி ------- ஆம் ஆண்டு ஏற்பட்டது.
   அ) 1990 ஆ) 2004 இ) 2005 ஈ) 2008
9. ஆப்பிரிக்காவின் தென்கோடிமுனை ------
   அ) கேப்பிளாங்கா ஆ) அகுல்காஸ் முனை இ) நன்னம்பிக்கை முனை ஈ) கேப்டவுன்
10. உயர் நீதிமன்ற நீதிபதிகள் ஓய்வுபெறும் வயது
    அ) 62 ஆ) 65 இ) 64 ஈ) 58
11. இந்திய அரசியலமைப்பின் அகவுரை திருத்தப்பட்ட ஆண்டு
    அ) 1951 ஆ) 1974 இ) 1976 ஈ) 1967
12. ஐ.நா.சபை 1979-ம் ஆண்டை --------- சர்வதேச ஆண்டாக அறிவித்தது
    அ) பெண் குழந்தைகள் ஆ) குழந்தைகள் இ) பெண்கள் ஈ) இவற்றில் எதுவுமில்லை
13. உலோக பணத்திற்காக எந்த உலோகம் பயன்படுத்தப்பட்டன?
    அ) தங்கம் ஆ) வெண்கலம் ஈ) வெள்ளி ஈ) மேற்கூறிய அனைத்தும்
14. தவறான ஒன்றை தேர்ந்தெடுக்கவும். முதலீட்டு கருவி போன்றவை
    அ) பங்கு வர்த்தகம் ஆ) பத்திரங்கள் இ) பரஸ்பர நிதி ஈ) வரி செலுத்துவது

**II. சரியா / தவறா எனக் குறிப்பிடுக.** **5x1=5**

15. காரன் வாலிஸ் பிரபு காவல் துறையை உருவாக்கினார்.
16. 1799 அக்டோபர் 17 ஆம் நாள் கட்டபொம்மன் தூக்கிலிடப்பட்டார்.
17. தீப்பாறைகள் முதன்மை பாறைகள் என்று அழைக்கப்படுகிறது.
18. பெருநகரங்கள் மற்றும் நகரங்கள் சுற்று சூழ் சீர்கேட்டிற்கு அதிக அளவு காரணமாக உள்ளன.
19. அமெரிக்க ஐக்கிய நாடுகள் ஒற்றுக்குடியுரிமை வழங்கிறது.

**III. பின்வரும் வினாக்களுக்குள் ஏதேனும் 10 வினாக்களுக்கு விடையளிக்கவும்.**
**வினா எண்.33-க்கு கட்டாயமாக விடையளி.** **10x2=20**

20. இளவரசன் ஹென்றி "மாலுமி ஹென்றி" என ஏன் அழைக்கப்படுகிறார்?
21. நிரந்தர நிலவரித்திட்டத்தின் சிறப்புக்கூறுகள் ஏதேனும் இரண்டினைக் கூறு.
22. தமிழ் இலக்கியத்திற்கு சமணர்களின் பங்களிப்பினை எடுத்துரைக்க.



Scanned with CamScanner
Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

23. மாநகராண நகரங்கள் மூன்றின் பெயர்களைக் குறிப்பிடுக.
24. மண்ணின் வகைகளைக் கூறுக.
25. காலநிலை – வரையறு.
26. கிராமபுறத்திலிருந்து நகர்புறத்திற்கு இடம் பெயர்வதற்கான முக்கிய காரணங்கள் யாவை?
27. ஆஸ்திரேலியாவின் பொருளாதார நடவடிக்கைகள் ஏதேனும் நான்கினை கூறு.
28. 1955–ஆம் ஆண்டு குடியுரிமை சட்டம் பற்றி நீவர் அறிவது யாது?
29. சமயச் சார்பின்மை எதனை குறிப்பிடுகிறது.
30. மனித உரிமைகளுக்கான உலகளாவிய அறிவிப்பின் (UDHR) முக்கியத்துவத்தை எழுதுக.
31. இந்தியாவில் ரூபாய் நோட்டுக்களை அச்சிட்டு வெளியிடுவது யார்?
32. பொருளாதாரத்தில் கருப்பு பணத்தின் விளைவு யாது?
33. முதலமைச்சர் எவ்வாறு நியமிக்கப்படுகிறார்?

**IV. எவையேனும் 9 வினாக்களுக்கு விடையளிக்கவும். 9x5=45**

34. கோடிட்ட இடங்களை நிரப்புக.
   அ) அந்தணர் மற்றும் அரச குலத்தோரின் மகன்கள், மகள்கள் மட்டுமே -------- இந்தியாவில் கல்வி கற்க முடியும்.
   ஆ) -------- என்பது கிராமப்புற பகுதிகளில் செயல்படும் முக்கிய உந்து காரணியாகும்.
   இ) அண்டார்டிகாவில் நிறுவப்பட்ட முதல் இந்திய ஆய்வு நிலையம் --------
   ஈ) பிரிவு 15 சமயம், சாதி, பாலினம் அல்லது பிறப்பிடம் ஆகியவற்றின் அடிப்படையில் -------- காட்டுவது தடை செய்கிறது.
   உ) நிகழ்வை வங்கியை -------- என்று அழைக்கலாம்.
35. பொருத்துக.

| | | |
|---|---|---|
| அ) ஆங்கிலேயர்கள் | – | நீர் உட்கசிந்து வெளியிடுதல் |
| ஆ) ஜான்சி | – | ஒற்றை குடியுரிமை |
| இ) தாவரங்கள் | – | 1600 |
| ஈ) இந்திய அரசியலமைப்பு | – | திரு.உதயக்குமார் |
| உ) இந்திய நாணயம் | – | லட்சுமிபாய் |

36. வேறுபடுத்துக.
   அ) காலநிலை மற்றும் வானிலை
   ஆ) வேளாண்சார்ந்த தொழிலகங்கள் மற்றும் கடல்வளம் சார்ந்த தொழிலகங்கள்.
37. இரண்டாம் கர்நாடக போர் குறித்து கட்டுரை எழுதுக.
38. 1857–ஆம் ஆண்டு புரட்சியின் தோல்விக்கான காரணங்களை எழுதுக.
39. தோட்டத்தொழில் பற்றி விவரி.
40. வெப்பநிலை எவ்வாறு அளவிடப்படுகிறது
41. நகரமயமாக்குதலில் ஏற்படும் சவால்களை ஆராய்க.
42. தொழிலகங்களின் வகைப்பாட்டை விளக்கப்படம் மூலம் விவரி?
43. ஒருவருக்கு எதன் அடிப்படையில் இந்திய குடியுரிமை இரத்து செய்யப்படுகிறது?
44. குழந்தைகளின் பாதுகாப்பிற்காக அரசு மேற்கொண்ட சில நடவடிக்கைகள் யாவை?
45. பண்டமாற்று முறையிலுள்ள தீமைகள் யாவை?
46. பொருளாதாரத்தில் கருப்பு பணத்தின் விளைவுகள் யாவை?
47. கீழ்க்காணும் இடங்களை உலக வரைபடத்தில் குறிக்கவும்.
   அ) ஆப்பிரிகா ஆ) ஆஸ்திரேலியா இ) டோக்கியா
   ஈ) பசிபிக் பெருங்கடல் உ) சகாரா பாலைவனம்

**V. கீழ்க்காணும் அனைத்து வினாக்களுக்கு விடையளி: 2x8=16**

48. அ) மதாராஸின் தோற்றம் மற்றும் வளர்ச்சி பற்றி எழுதுக. (அல்லது)
   ஆ) மண்ணினை வகைப்படுத்தி விவரி.
49. கீழ்க்காணும் இடங்களை இந்திய வரைபடத்தில் குறிக்கவும் (8 மட்டும்)

| | | | |
|---|---|---|---|
| 1. புதுடெல்லி | 2. பம்பாய் | 3. கல்கத்தா | 4. மதராஸ் |
| 5. கள்ளிக்கோட்டை | 6. லக்னோ | 7. விக்கிரம சீலா | 8. அகமதாபாத் |
| 9. அஸ்ஸாம் | 10. ஜாம்ஷெட்பூர் | | |



Scanned with CamScanner
Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com